RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22257

OPEN ACCESS

# என் ஸ்ரீராமின் படைப்புகளில் வழிபாட்டு மரபுகள்

ஆ. அருணா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா

# Traditions of Worship in N.Sriram's Works

A. Aruna [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, Tamil Nadu, India

* Corresponding Author: aaruna3714@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

The practice of worship has been inevitable in all societies, from primitive society, which was so caught up in the clutches of nature, to present-day society, which lives in a largely artificial world. When the human race was unable to understand the outbursts in the actions of nature, worship sprang up because it acted with a sense of fear and gratitude for thinking of the energies that were helping it. The worship of the deity is a traditional practice passed down from the ancestors. All the processes performed in the name of the deity are methods of worship. This benefits not only the worshippers but also their dependents. Thus, the purpose of this article is to highlight the worship-related traditions contained in the works of N. Sriram.

**Keywords:** Sriram, Worship, Nature, Society

## முன்னுரை

தமிழர் பண்பாட்டு பழக்கவழக்கங்களில் முதன்மை பெற்று விளங்குவது தெய்வ வழிபாட்டு முறையாகும். தெய்வ வழிபாடானது அகவழிபாடு, புறவழிபாடு என இரு நிலைகள் காணப்பட்டாலும் மனதில் இறைவனை நினைத்து புறத்தில் வெளிப்படுத்துவது காலந்தொட்டு நிகழ்கின்ற முறை எனக் கூறலாம். மனிதன் கூட்டமாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய காலத்தில் வழிபாடு தோன்றியிருத்தல் வேண்டும். மனிதன் முதலில் விலங்கைக் கண்டும், அருவி நீர் நிலைகளைக் கண்டும் தீயைக்கண்டும், சூறாவளியைக் கண்டும் அஞ்சினான். அவற்றால்தனக்குத் துன்பம் ஏற்படுவதைக் கண்டு அச்சம் கொண்டான். இத்தகைய இயற்கையின் பேராற்றலைக் கண்டு வியந்து வணங்கினான். இவ்வச்சம் தெய்வ வணக்கத்தை அல்லது சிறு தெய்வ வழிபாட்டை முதற்கண் தோற்றுவித்தது எனலாம்.

## வழிபாடு பற்றிய விளக்கம்

தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடு வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்து பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

"வழிபடு என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்ற சொல். வழிபாடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல் என்று அகராதிகள் பொருள் தருகின்றன" இவற்றில் வழிபாடு என்பது பற்றி அறிய முடிகிறது (Kiriya, 2014).

## வழிபாட்டு மரபு

தொன்மை, பழமை, மரபு போன்ற சொற்கள் நம் முன்னோர்களின் வாழ்வின் எச்சங்களைக் குறிப்பனவாகும். பண்டையத் தமிழர் ஐவகை நிலங்களில் கருப்பொருள்களைச் சுட்டும் பொழுது தெய்வத்தை முதலாவதாக வைத்துக் குறிப்பிடுகின்றனர்.

"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கரு என மொழிப"

என்ற தொல்காப்பிய நூற்பாவழி தெய்வத்திற்கு பண்டைய தமிழரிடமிருந்த சமூகநிலையையும் மதிப்பையும் அறியலாம் (Ganesaiyar, 2010).

இன்றும் ஒரு செயலைத் தொடங்கும் பொழுது அவரவர் குலதெய்வங்களையும், விருப்ப தெய்வங்ளையும் வணங்கி வழிபடுவது மரபு" வழிபாடு வழிபடுவோரின் வாழ்க்கை முறையிலிருந்து எழுகின்றன. ஒரு சமுதாயம் அதன் உணவு, உடை, உறையுள் ஆகிய புறவாழ்க்கைத் தேவைகளை எந்த முறையில் பெறுகிறதோ அதற்காக எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளதோ அந்த அமைப்பின் அடிப்படையின் மீது தெய்வ நம்பிக்கை என்ற மேற்கோப்பு எழும்" என்பார் நா. வானமாமலை (Vanamamalai, 2008).

## துடியான தெய்வங்களும் - வழிபாட்டு முறைகளும்

மனிதன் இயற்கையின் பேராற்றல்களைக் கண்டு வியந்தும், அஞ்சியும் வணங்கினான். இவ்வச்சம் தெய்வ வணக்கத்தை அல்லது சிறுதெய்வ வழிபாட்டை முதற்கண் தோற்றுவித்தது எனலாம்.

கிராமப்புற மக்கள் தெய்வங்களை நம்பிக்கயுடனும் அச்ச உணர்வுடனும் வழிபடுகின்றனர். நன்மை விளைந்தால் தெய்வத்தின் அருள் என்றும் தீமை விளைந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

"அட அப்பனே..... கருப்பணா

நீ வேட்டைக்கு வீரனப்பா

அட வெள்ளைக்குதிர விட்டெறங்கி

கணக்கப் பிரிச்சக் குடு

பிரிச்சு குடுமிப்போ" (Sriram, 2016)

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை அன்று கருப்பண்ணசாமிக்கு படையலிட்டு வழிபடுதலையும், சாமியின் அருளினால் தன்னை நாடி வருகிறபவர்களுக்குக் கணக்குஎனப்படும் குறி சொல்கின்ற பூசாரியின் அதி அற்புத ஆற்றலையும் "கருப்பணவெளி" என்னும் கதை நுட்பமாக சித்தரித்துள்ளது.

## தெய்வ வழிபாட்டில் பலியிடும் வழக்கம்

தெய்வ வழிபாட்டில் தம்மைப் பாதுகாக்கப் பிற உயிர்களைப் பலியிடும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வாறு உரிய காலத்தில் வழிபடவில்லையானால் தங்கள் மீது தெய்வங்கள் சீற்றம் கொள்ளுமென அஞ்சினர். இதனைப் பிராய்டு, "அச்சம் குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாடு" என்பர் (Vedhanayakam, 2010).

நான்கைந்து வருடங்களாக பருவமழை பொய்த்தற்கு முனி அப்புச்சியை நினைக்காததே முழுக்காரணம் என கிராம மக்கள் நம்புகின்றனர் அதற்காக, "எருமைக்கிடாவை இழுத்து வந்தார்கள்.

முனி அப்புச்சி கோயில் பெரிய வெட்டரிவாளை இரண்டு ஆட்கள் பிடித்து ஓங்கிக் கிடாயின் கழுத்தில் வெட்டினார்கள்" (Sriram, 2016) .

இவ்வாறு உரிய காலத்தில் தெய்வங்களை வழிபடவில்லையானால் மழை பெய்யாது இயற்கையின் மாற்றங்களைச் சந்திக்க நேரிடும் என அச்சம் கொள்கின்றனர். இந்த அச்ச உணர்வே தெய்வ வழிபாட்டில் உயிர்களை பலியிடும் வழக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

## அடசலிடுதல்

அடசலிடுதல் என்பது சிறு தெய்வ வழிபாட்டில் சாமிக்கு நேர்ந்து கொண்ட சேவல்களை படைத்து விருந்தளிக்கும் முறையைக் குறிக்கும்.

## கவுண்டப்பாரு பொங்கல்

தோட்டங்களிலோ, விவசாய நிலங்களிலோ மனிதர்களுக்கு விஷம் ஏறிய பாம்புகளால் தீங்கு ஏற்படாமல் இருக்கவும் அவை மனிதர்களின் கண்களுக்குத் தென்படாமல் இருக்கவும் கவுண்டப்பாரு என்ற சாமியை வழிபடுகின்றனர். புற்றுக்கண்ணிற்கு சேவல் அறுத்து பிபாங்கல் வைத்து வழிபடும்முறை கிராமங்களில் இன்றளவும் காணப்படுகின்றது.

"விடிந்தால் கவுண்டப்பாரு பொங்கல் புற்றுக் கண்ணுக்கு சேவல் அறுத்து படையல் வைத்து அடசல் போடுதல் சடங்கு" அடசலிடுதல், கவுண்டப்பாரு பொங்கல் போன்ற வழிபாட்டு முறைகளை "மண்கால் வேட்கை" என்னும் கதையானது பதிவு செய்துள்ளது (Sriram, 2016).

## மழை வழிபாடு

மழை வேண்டிக் கடவுளை வழிபடுதல் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. மழையின்றித் துயருறும் பாமர மக்களுக்கு மழையை வேண்டி இறைவனிடம் வழிபடுதலைத் தவிர வேறு வழி தெரியாது கிராமங்களில் மழை பெற வேண்டி உடுக்கை அடித்து கூத்து நிகழ்த்துகின்றனர். உடுக்கைக் கூத்துகளில் பெரும்பாலும் அண்ணமார்சாமி கதைப்பாடல்கள் இடம் பெறுகின்றன.

"ஆட்டக்களத்திலே....

ஆடும் கலைஞனுக்கும்...

பார்க்கும் மக்களுக்கும்....

குத்தம் குறை வராமே...

தீட்டு தடங்கல் வராமே....

காத்துக்கருப்பு அண்டாமே...

கனத்திடமாகக் காத்து நின்று

கூத்து நடக்க வேணுமப்போ..."

என்று அண்ணமார்சாமி கதைப்பாடலைப் பாடியும் உடுக்கை அடித்தும் இரவு நேரங்களில் கூத்து நிகழ்த்துகின்றனர் (Sriram, 2016).

"திருக்கோயில்விட்டு மங்கே ஆடி வர வேணுமம்மா...

தவசுமரம் சோலையிட்டு தானிறங்கி வாருமம்மா....

கண்ணு சிவக்கலையோ...

கடும் கோபம் ஆகலையோ

மீசை துடிக்கலையோ

முன் வீரம் ஆகலையோ

தூக்கி எறியலையோ

துள்ளிக் குதிக்கலையோ

இன்னும் என்ன தாமசமோ

ஆடி வர வேணுமய்யா…" (Sriram, 2016)

"அண்ணமார்சாமிகள் பாண்டவர்களோட மறுபிறப்பா பூலோகத்துல பொறந்திருக்-காங்கன்னு ஐதீகம். அவுங்க உசுரோடு தெய்வமாகி தேவலோகம் போனவங்க அவுங்க வரலாற்றை நாம ஆம்பள வேஷம் பொம்பள வேஷம்னு மாறி மாறி ஆடிப்பாடிக் கூத்துகட்டுறோம். பார்க்கிற சனத்துக்கு நாம கூத்துக்காரங்களா தெரியக்கூடாது கதைத் தெய்வங்களா தெரியனும் கையெடுத்துக் கும்பிடனும்…"(Sriram, 2016).

இவ்வாறு மழை வேண்டி அண்ணமார் சாமிகளை தெய்வங்களாக எண்ணி, உடுக்கையடித்துக் கூத்துக்கட்டி வழிபடும் வழக்கம் கிராமங்களில் நிலவி வந்துள்ளதை "உடுக்கைவிரல் "என்னும் கதையின் மூலம் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## மண் உருவார வழிபாடு

இயற்கையை வழிபட்டு வந்த மனிதன் மனித உறுப்புகளின் பயனை உணர்ந்து தன்னைவிட உயர்ந்த சக்தியுடைய தெய்வத்திற்கு தன்னையொத்த வடிவத்தை நேர்த்திக் கடனாகச் செலுத்தி வழிபடத் தொடங்கினான்.

"மண்ணில் துரையின் உருவாரம் உருப்பெற்றது மண் உருவாரத்திற்கு கண் திறக்கும். சடங்கை நிகழ்த்தினர். துரையின் மண் உருவாரம் மாகாளியம்மன் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது" (Sriram, 2019).

தன்னைப் போன்ற வடிவத்தை மண்ணால் உருவாரம் செய்தும், நோயால் பாதிப்படைந்த உறுப்புகளைப் போன்ற உருவம் செய்தும் வழிபடும் பொழுது நோய் நீங்கி குணமாகும் என்று நம்புகின்றனர். மண்ணால் உருவம் செய்து நேர்த்திக்கடனாகக் கொடுத்து வழிபடுதல் பற்றிய செய்திகளை "மண் உருவாரங்கள்" என்ற கதை எடுத்தக்காட்டியுள்ளது.

## நேர்த்திக் கடன் வழிபாடு

குழந்தைப்பேறு இல்லாதவர்கள் குழந்தை வரம் வேண்டி "பிள்ளைத் தொட்டில்" (மரத்தாலான மிகச் சிறிற தொட்டில்) செய்து கோயில் மரங்களில் தொங்கவிடும் வழக்கம் பரவலாக உள்ளது. விடத்தலா மரத்தில் குழ்நதை வரம் வேண்டி தொட்டில் கட்டி வழிபடும் முறையை "மீதமிருக்கும் வாழ்வு" என்னும் சிறு கதையானது பதிவு செய்துள்ளது.

## முடிவுரை

வழிபாடு என்பவை மனித சமுராயத்தின் பண்பாடு. பழக்கவழக்கங்கள், நம்பிக்கை சார்ந்த வாழ்வியல் சடங்குகளைப் பிரதிபலிக்கின்றன. மக்களின் நடைமுறை வாழ்வில் வழிபாட்டு முறைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்து நோக்கும் போது வழிபாட்டை சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். என். ஸ்ரீராமின் படைப்புகளில் கிராமக் கோயில்கள் துடியான தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், கடவுள் சார்ந்த நம்பிக்கைகள் போன்றவை பரவலாக இடம் பெற்றுள்ளன. மனித வாழ்வில் வழிபாட்டு முறைகள் என்பவை இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன எனலாம்.

## References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India

Kiriya, (2014) Tharkalath Tamil Agarathi, Kiriya Pathippagam, Chennai, India

Sriram, N. (2016) N Sriramin Padaipuakal, Tholamai Veliyedu, Chennai, India

Sriram, N. (2019) Meesai Varaintha Pugaipadam, Nattirnai Pathippagam, Chennai, India

Vanamamalai, N. (2008) Palangkathaikalum Palamolikalum, New Century Book House, Chennai, India

Vedhanayakam, K.V. (2010) Valviyalum Panpadum, Sundaravalavu Pathippagam, Erode, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License